Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.723/2022

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | செந்தில்பாண்டியன் | Occupation | தலைமை காவலர் |
| Father's name | கோபலகிருஷ்ணன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of June 2025.

<u>20.06.2025</u>

2ம்எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் ஆகவில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் தாலுகா காவல் நிலைத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.11.2017 ம் தேதி மம்சாபுரம காவல்நிலையத்தில் காவலராக பணியிலிருந்தபோது மம்சாபுரம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களுடன் நானும் முதல் நிலைகாவலர் 1510 கணேசமூர்த்தி என்பவரும் மம்சாபுரம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் மணல் திருட்டு சம்மந்தமாக ரோந்து சுற்றி மம்சாபுரம் ராக்காட்சியம்மன் கோவில் ஓடை அருகே வந்தபோது TN 67 AM 7791 என்ற எண் கொண்ட டிராக்டருடன் கூடிய TN84 D 4493 என்ற எண் கொண்ட டிரெய்லர் வந்தபோது அதனை சோதனை செய்தபோது மணல் திருடியது தெரிய வந்தது. உடனே டிராக்டரை ஓட்டிவந்த பின்னால் ஓட்டிவந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டு

தெரிந்த ராஜபாளையம் மேல ஆவாரம்பட்டி பாரதியார் தெருவை சேர்ந்த அழகு மகன் முருகேசன் என்பவரை விசாரிக்க மேற்படி டிராக்டர் ராஜபாளையம் இனாம் செட்டிகுளம் ஒத்தப்பட்டியை சேர்ந்த அழகு மகன் முருகன் என்ற கடுக்கா முருகன் என்பவருக்கு சொந்தமானது என்றும் மேற்படி 25.11.2017 அன்று முருகன் என்ற கடுக்கா முருகன் என்பவர் அதிகாலையில் டிராக்டரை என்னிடம் கொடுத்து ராக்காட்சியம்மன் கோவில் ஓடையில் சென்று மணல் அள்ளி வருமாறு கூறினார். அதன்பேரில் அவர் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று சுமார் ஒரு யூனிட் மணல் அள்ளி வந்தேன் என்று கூறினார். உடனே சார்பு ஆய்வாளர் அரசு அனுமதி ரசீதோ அல்லது அரசிடமிருந்து அனுமதியோ இருக்கிறதா என்று கேட்டதற்கு அழகு மகன் முருகேசன் எதுவுமில்லை என்று கூறினார். அதன் பின்பு அரசு அனுமதியின்றி மணல் அள்ளிய குற்றத்திற்காக அவரை சார்பு ஆய்வாளர் கைது செய்தும் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் ஓட்டிவந்த வாகனத்தை அத்தாட்சியின் அடிப்படையில் கைப்பற்றியும் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். ஏற்கனவே அ.சா.ஆ 1 மற்றும் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சி மற்றம் கைப்பற்றுதல் அத்தாட்சியிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். இது சம்மந்தமாக சார்புஆய்வாளர் பிரவீன்குமார் என்னை விசாரித்தீர்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி குறிப்பிட்ட ராக்காட்சியம்மன் கோவிலுக்கு செல்வதற்கு 4 வழிகள் உள்ளது. மேற்படி 4 வழிகளிலுமே மாந்தோப்பு மற்றும் தென்னை தோப்புகள் அதிகமாக உள்ளது என்றால் சரிதான். பொதுவாக அந்த வழியில் மேற்படி தோப்புகளுக்கு விவசாயம் செய்வதற்காக ஆட்கள் வந்து செல்வார்கள் என்றால் சரிதான். பொதுவாக ராக்காட்சியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காகவும் குளிப்பதற்காகவும் ஆட்கள் வந்து செல்வார்கள் என்றால்

சரியல்ல. மாதத்தில் ஒரு முறை மட்டும் அமாவாசை அன்று ஆட்கள் சாமி கும்பிடுவதற்காக வந்து அன்றிரவு மட்டும் தங்கிவிட்டு சென்று விடுவார்கள். ஆனால் குளிப்பதற்கு தடைசெய்துவிட்டதால் குளிப்பதற்காக ஆட்கள் வருவதில்லை. ராக்காட்சியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக தினமும் ஆட்கள் வந்து செல்வார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும சரியல்ல. ராக்காட்சியம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் புளுகாண்டி கருப்பசாமி கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கருப்பசாமி கோவிலுக்கு அருகிலும் தென்னை தோப்புகள் மற்றும் மாந்தோப்புகள் உள்ளதால் தோப்பிற்கு ஆட்கள் அடிக்கடி வந்து செல்வார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஓடையானது ராக்காட்சியம்மன் கோவிலிலிருந்து புளுகாண்டி கருப்பசாமி கோவிலை தாண்டியும் உள்ளது என்றால் சரிதான். ராக்காட்சியம்மன் கோவிலிலிருந்து புளுகாண்டி கருப்பசாமி கோவிலானது சுமார் 5 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. ஓடையில் குறிப்பாக எந்த இடத்திலிருந்து மணல் அள்ளப்பட்டது என்று போலீசார் விசாரணையிலும், எனது முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் ரோந்து சென்றது பற்றியும். அலுவல் பற்றியும் காவல் நிலைய பொதுநாட்குறிப்பேட்டிலும் காவலர்களின் நோட்டு புத்தகத்திலும் குறிப்பிடுவோம் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்தததாக என்னால் குறிப்பிடப்படும் தேதியில் நான் ரோந்து சென்றேனா என்பது பற்றி மேற்படி பதிவேடுகளை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி பதிவேடுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் ரோந்து பணிக்கு செல்லும் முன்பே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டுதான் அத்தாட்சியின் மூலம் அத்தாட்சியில் கூறப்பட்டுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ராக்காட்சியம்மன் கோவிலுக்கு ஆட்கள் நடமாட்டம் அதிகமுள்ளது என்றாலும் அங்குள்ள நபர்களை சாட்சியாக விசாரணை செய்யாமல் போலீசார் தரப்பினர்களாகிய நாங்களேஅத்தாட்சியில்

காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்னவிதத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.